RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt21419

OPEN ACCESS

# புலமை இலக்கணத்தில் சமயச்சார்பு

வெ. திருவேணி [அ], கு. கார்த்திக் [அ, *]

[அ] தமிழ்ப் பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி-630003, தமிழ்நாடு, இந்தியா.

# Religiosity in Pulamai ilakkanam

V. Thiruveni [a], K. Karthick [a,*]

[a] Centre for Tamil Culture, Alagappa University, Karaikudi-630003, Tamil Nadu, India

* Corresponding Author: tamilkarthik1998@gmail.com

Received: 14-07-2021
Revised: 13-09-2021
Accepted: 16-09-2021
Published: 21-09-2021

Check for updates

**ABSTRACT**

Until the Sangam literary period (till 200 AD), Tamil language was secular and Tamil literature was created with an emphasis on virtue in both internal and external life. After that, religious literature started appearing in Tamil language. Tamil grammar texts are based on literature that appeared in different periods. Thus the "Pulamai ilakkanam" (grammar for scholarliness) composed by Vannacharabam Dantapani swami reveals the literary context that prevailed in the 19th century when he lived. Pulamai ilakkanam shows the author's religiosity and the religious beliefs and devotion in the field of education and literature at that time. Grammar is the rules for creating literature. If so, constructing Tamil scholarliness in relation to a particular religion would be tantamount to narrow down the breadth of the Tamil language. Based on the content of Pulamai ilakkanam and the literary context of the time, this article discusses the dominance of the religions over Tamil literature and the use oflanguage by religions for their development.

**Keywords:** Tamil Scolarliness, Tamil Education, Tamil literature, Religion, Unified Six Indian religion, Religiosity, 19th Century, Dantapani swami

## முன்னுரை

19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய அறுவகை இலக்கணம் நூலின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது புலமைஇலக்கணம்ஆகும். தமிழில் தொன்றுதொட்டு வரும் இலக்கண நூல்கள் ஐந்திலக்கணங்களை மட்டும் அல்லது ஐந்திலக்கணங்களுள் சிலவற்றை மட்டும் பகர்ந்து வந்த நிலையில் ஆறாவதாக புலமைக்கு இலக்கணம் கூறியுள்ளார் தண்டபாணி சுவாமிகள். இவர் அறுவகை சமயங்களான சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணாபத்தியம், கௌமாரம் ஆகியவற்றின் நெறியைக் கடைப்பிடித்தவர். அவற்றுள் முருகனை யாதுமான கடவுளாக வணங்கும் கௌமார சமயத்தை ஏற்றுப்போற்றி வாழ்ந்தவர். சமயிகள் தங்கள் சமயங்களை மக்களிடம் பரப்பவும், சமயப்பற்றை அவர்களிடம் வளர்க்கவும் பன்னெடுங்காலமாகத் தமிழ்ப்புலமையைப் பயன்படுத்தி வந்துள்ளனர். புலமை இலக்கண நூற்பாக்களின் வழி, தமிழ்ப்புலமையை அணுகுவதில் தண்டபாணி சுவாமிகளின் சமயச்சார்பான போக்கு மற்றும் அவர் காலத்தில் புலமைத்துறையில் நிலவிய சமயச்சார்பான சூழல் ஆகியவற்றையும், அக்காலத்தில் கல்வி, புலமை ஆகியவற்றில் தெய்வ பக்தி, சமயப்பற்று ஆகியவை வகித்த பங்கு பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

## புலமை இலக்கணம் அமைப்பும் உள்ளடக்கமும்

1. தேற்ற இயல்பு
2. தவறியல்பு
3. மரபியல்பு
4. செயல்வகை இயல்பு

ஆகிய நான்கு பகுப்புகளாகப் பகுத்து விளக்கப்பட்டுள்ளது புலமை இலக்கணம். இவற்றுள் தேற்ற இயல்பு என்ற பகுதி, ஒருவர் தன்னை புலமை உடையவராக ஆக்கிக்கொள்வதற்கான வழிமுறைகளைக் கூறும் பகுதியாகும். தவறியல்பு என்பது, புலவர்களிடம் அணுகவொண்ணாத குற்றங்களைக் கூறும் பகுதியாகும். மரபியல்பு என்பது, தனது புலமைத் திறனால் அதிசயங்கள் நிகழ்த்தியதாகக் கூறப்படும் பல்வேறு புலவர்களைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்ற பகுதியாகும். செயல்வகை இயல்பு என்ற பகுதி, தொழில்நிலை, நடுநிலை, எதிர்நிலை, அருள்நிலை என நால்வகைச் செயல்முறைகளை விளக்குவதாக உள்ளது. புலமையைத் தொழிலாகக் கொண்டோர் எவ்வாறு முறையாகச் செயல்பட வேண்டும் என்பது தொழில்நிலை என்கிற பகுதியில் கூறப்படுகிறது. புலவர்களுக்கு இடையே போட்டி ஏற்பட்டுவிட்டால் அப்போட்டிக்கு நடுவராக இருப்பவர் ஒழுகவேண்டிய நடுவுநிலைமை பற்றிச் சிறப்பாகவும், போட்டியாளர் நடந்துகொள்ளவேண்டிய முறைகள் பற்றிப் பொதுவாகவும் விளக்குவது நடுநிலை என்ற பகுதியாகும். எதிர்நிலை என்ற பகுதி, எதிரே உள்ள புலவன் அல்லது குறிப்பிட்ட நூலின் தன்மை பற்றியும் எதிர்காலத்தில் நிகழ வேண்டுவதாக ஆசிரியர் நினைத்தவற்றையும் கூறுகின்றது. புலவர்கள் பலர் தம் புலமைத்திறத்தால் நிகழ்த்திக்காட்டியதாகக் கூறப்படும் அதிசயங்களை மரபியலில் கூறியது போலவே, அதிசயங்கள் நிகழ்த்திய புலவர்களும் இறைவனின் அருள் சாதகமாக இல்லாத காலத்தில் தோல்வியுற்றதாகக் கூறப்படும் சில செய்திகளை அறிவுறுத்துவதாக அமைந்துள்ளது அருள்நிலை என்னும் பகுதி

## புலமைக்கான பொது இலக்கணம்

இந்நூலின் ஆசிரியர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து அக்காலத்தில் இருந்த தமிழ்ப் புலமை மரபினைக் காட்சிப்படுத்தும் வகையிலும், அவரது சமய நம்பிக்கைகளை ஏற்றியும் புலமை இலக்கணத்தைப் படைத்துள்ளார். இந்நூல் புலமைக்கான பல்வேறு வரையறைகளையும் எடுத்துரைக்கின்றது. அவற்றுள்,

'அறியும் தன்மையைப் புலமை ஆம்எனப்

பற்பல பெரியேர் பகர்ந்தனர் அன்றே'

(நூற்பா-644, அறுவகை இலக்கணம்)

என்னும் நூற்பாவில் புலமை என்பது அறிதல் என்று புலமைக்கான நேரடிப் பொருளை முதலில் விளக்கும் ஆசிரியர்,

'அக்கரம் முதற்கொண்டு அணிஈறு ஆகப்

பகரும் நூலும் பாவலர் முன்பில்

கற்கை நலம்எனக் காண்பது கடனே'

(நூற்பா-648, அறுவகை இலக்கணம்)

என்னும் நூற்பாவில் புலமையைப் பெற விரும்புவோர் எழுத்து சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய இலக்கண நூல்களைப் பாவலரின் துணைக்கொண்டு கற்க வேண்டும் என்று புலமை பெறுவதற்கான அடிப்படைத் தேவையான கற்றலை வலியுறுத்துகிறார். ஆனால் இதற்கு அடுத்த

நூற்பாவிலேயே புலமைக்கு இன்றியமையாதது தெய்வத்துணையே என்று சமயம் சார்ந்த பக்தி முறைகளைப் புலமையோடு தொடர்புபடுத்தத் தொடங்குகிறார் தண்டபாணி சுவாமிகள்.

## புலமைக்கான இலக்கணத்தில் சமயச்சார்பு

'நூலின் துணையினும் நூறுபங்கு அதிகம்

தெய்வத் துணையாம் செழுந்தமிழ்க் கவிக்கே'

(நூற்பா-649, அறுவகை இலக்கணம்)

என்னும் நூற்பாவில் 'கற்கும் நூல்களைக் காட்டிலும், தமிழில் புலமை பெறுவதற்கு தெய்வத்தின் துணையே நூறு மடங்கு அதிகம் தேவைப்படும்' என்னும் ஆசிரியரின் கருத்து, புலமையினைச் சமய நம்பிக்கையோடும் தெய்வ நம்பிக்கையோடும் சார்புடையதாகக் கட்டமைக்கின்றது. தண்டபாணி சுவாமிகள் புலமை இலக்கணம் முழுவதும் தெய்வ அருள், அதிசயம் நிகழ்த்துதல், சமயநெறி ஆகியவற்றைக் கொண்டே புலமைத் திறனை மதிப்பிடுகிறார். சமயக் கொள்கையைப் பொறுத்தவரையில் தண்டபாணி சுவாமிகள், 'மெய்கண்டாரின் சைவ சித்தாந்தத்தையும், சங்கரரின் அத்வைதத்தையும் சில இடங்களில் ஏற்றுக் கொள்பவர். சூரியன், சிவபெருமான், சக்தி, திருமால், விநாயகன், முருகன், என்னும் அறுசமய வடிவங்களும் ஒரே பரம்பொருளின் பல்வேறு பண்புகளை உருவகப்படுத்தும் கற்பனைகள் என்றும், இவற்றுள் எதனை வழிபட்டாலும் அவ்வழிபாட்டை ஏற்றுப் பயன்தரும் பரம்பொருள் ஒன்றே என்பதும், அப் பரம்பொருள் பெயரோ வடிவமோ இல்லாத ஒன்று என்பது இவருடைய அடிப்படைக் கொள்கை ஆகும்' (Nagarasan,1991). இவர் சைவ சித்தாந்தத்தை நெறியாகக் கொண்டிருந்ததை சிவன் உமை முதலிய தெய்வங்களைப் போற்றுவதால் அறிந்தாலும் தனது நூலில் சைவசமயக் கொள்கைகளைப் புலமை மீது திணித்து விதி வகுத்துள்ளதாலும் அறிய முடிகிறது.

'சுருதியும் புலவோர் சொல்லே என்றிடல்

நடுநிலை ஆம்என நவில்வர் பெரியோர்'

(நூற்பா-756, அறுவகை இலக்கணம்)

என்னும் நூற்பாவில் புலவர்களே வேதத்தைக் கூறினர் என்று உணர்ந்து உரைப்பதே நடுநிலைத்தன்மை என்று பெரியோர் கூறுவர் என்கிறார். 'வேதம் மனிதனால் ஆக்கப்பட்டது அல்ல. அது எந்த புருசன் அல்லது எந்த மனிதனாலும் ஆக்கப்படவில்லை. இதனை உணர்த்தவே மீமாம்சகர் வேதத்துக்கு அபௌர்ஷேயம் என்ற ஒரு பெயரையும் இட்டிருந்தனர். வேதம் இறைவனால் ஆக்கப்பட்டது என்பதையும் மீமாம்சகர் ஒப்புக்கொள்வதில்லை. இது மீமாம்சம் என்ற ஒரு வைதீக சமயப்பிரிவினரின் கொள்கை. மீமாம்சகரது இம்முடிவோடு சைவ சித்தாந்திகள் கொள்கைகளாகிய வேதம் இறைவனால் அருளப்பட்டது, இறைவன் சுத்த மாயையிலிருந்து நாதத்தைத் தோற்றுவிக்கிறான் என்பன போன்றவற்றை ஒப்பிடுவது நலம்' (Lakshmanan, 1960). சைவ சித்தாந்தம் இத்தகைய கொள்கையை உடையதாக இருந்ததால் தான் தண்டபாணி சுவாமிகள் புலவர்களால் அன்றி தானாக வேதம் தோன்றவில்லை என்ற கொள்கையில் அந்நூற்பாவைச் செய்துள்ளார். இறைவனே வேதத்தை அருளினான் என்னும் சைவ சித்தாந்திகளின் கொள்கையோடு, புலவர்களே வேதத்தை உரைத்தனர் என்னும் தண்டபாணி சுவாமிகளின் கூற்று முரண்படுவதாத் தோன்றினும், இதற்கான நுட்பமான விளக்கத்தை அந்நூற்பாவின் விளக்கவுரையில்அளிக்கும் புலவர் ப.வெ. நாகராசன், "பரம்பொருள் ஒரு மனிதனை அல்லது கடவுளரில் ஒருவரைக் கருவியாகக் கொண்டு உள்நின்று உணர்த்துகிறார் என்றே வைத்துக்கொள்வோம் - இப்படி இறைவனால் உள்நின்று உணர்த்தப் பட்டதாலேயே கருவியாகிய அவர் முதலில் புலமைபெற்றுப் புலவர் ஆகிவிடுகிறார். உலகத்திற்கு எட்டுவது இறைவனின் செய்தியே எனினும் புலவரின் வாய்மொழியே. இது பற்றியே இவர் ஏழாமிலக்கணத்திலும் 'வேதமோடாகமம் விரித்து உரைத்தானும் புலவன் என்று உணராப் புல்லியர் பலரே' என்றார்" (Nagarasan, 1991) என எடுத்துரைத்து, இறைவனே வேதத்திற்கு மூல காரணம் என்னும் ஆசிரியரின் கருத்தினை

விளக்கியுள்ளார். வேதங்கள் இறைவனால் இயற்றப்பட்டன என்ற சைவ சமயத்தின்கொள்கையை நடுவுநிலைமை என்று நடுநிலைக்கு இலக்கணம் கூறுகிறார் தண்டபாணி சுவாமிகள். ஒரு சமயத்தின் கொள்கையை நடுநிலை என்று கூறுவதில் இருந்து அக்காலத் தமிழ்ப்புலமை மரபில் சமயங்களின் தாக்கத்தினை அறியமுடிகிறது. இறைவனையே புலவன் என்று கொள்ளும் மரபு சைவ சமயத்தில் காணப்படுவதை திருவிளையாடற் புராணம் முதலிய நூல்கள் வழி அறியலாம். இத்தகைய சைவ சமயக் கருத்தினை தண்டபாணி சுவாமிகள்,

'தெய்வமும் புலமைத் திருவுருவாம் என்று

அறியும் பெரியோர்க்கு அவர்தாம் இணையே'

(நூற்பா-711, அறுவகை இலக்கணம்)

என்ற நூற்பாவில் வலியுறுத்தியுள்ளார்.

சங்க இலக்கியங்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படையில் 'மாலை மார்ப நூலறி புலவ' (திருமுருகாற்றுப்படை-261) என்றும், 'பலர் புகழ் நன்மொழிப் புலவரேறே'(திருமுருகாற்றுப்படை-268) என்றும் 'புரையுநர்இல்லாப் புலமை யோயே' (திருமுருகாற்றுப்படை-280) என்றும் முருகக் கடவுள் புலவன் என்று போற்றப்பட்டுள்ளான். தண்டபாணி சுவாமிகளும்,

'பாணனும் தருமியும் பெத்தானும் உய்யப்

பாடியது அன்றிப் பைந்தமிழ்க் கழகத்

தலைவனைப் பழித்தும் தனிக்கவி பகர்ந்த

பரமனும் புலவன் என்பது பண்பே'

(நூற்பா-712, அறுவகை இலக்கணம்)

என்ற நூற்பாவில் பாணப்பத்திரர், தருமி, பெத்தான் சாம்பான் ஆகியோர்க்கு சிவனே பாடல் செய்தான். எனவே சிவனைத் தமிழ்ப் புலவன் என்பதே முறை என்று திருவிளையாடற் புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு கூறுகிறார்

## சீவகாருண்யத்தில் முரண்பாடு

'கொல்லல் ஊன்சமைத்தல் ஆதிய விரித்துக்

கழறுந் துணிவுடைக் கவிப்புல வோரைப்

பேயர்என்று உலகம் பெரிதுஇகழ்ந்திடுமே' (Nagarasan, 1991)

என்னும் நூற்பாவில் புலவர்கள் தம் படைப்புகளில் உயிர்க்கொலை மற்றும் புலால் சமைத்தல் முதலிய செயல்களை நயந்தோ உயர்த்தியோ பாடினால் அவர்களைப் பேயர்கள் என்று உலகம் இழிவாகக் கூறும் என்கிறார் தண்டபாணி சுவாமிகள். இவ்வாறு கூறுவது சீவகாருண்யக் கொள்கையால் நூலாசிரியர் உயிர்கள் மீது கொண்ட கருணை போலத் தோன்றுகிறது. இதற்கான விளக்கவுரையில், மக்கட்கு நன்னெறி புகட்டுவதே இலக்கியத்தின் நோக்கம் என்பதால் அதைப் படைப்போர் கொலையையும் புலால் சமைப்பதையும் உயர்த்திப் பாடுவது தவறு என்று தண்டபாணி சுவாமிகள் கூறுவதாக திரு.ப.வே. நாகராசன் எடுத்துரைக்கிறார். ஆனால்,

'வாதுக்கு ஆதரம் அகிய வண்ணமும்

விருதுக்கு ஆதரம் ஆயவெண் பாவும்

அறியாப் புலவருக்கு அமர்விளைந் திடுங்கால்

அவ்விரு புலவரும் அறிந்த பாடல்

தொகையில்ஒன்று உயர்வது குறித்துக் காட்டிப்

பாடும் திறமையில் பழுதுபட் டோனை

மற்றவன் புடைக்கச் செய்து மகிழ்வது

தக்க பான்மை என்று உரைப்பது தரமே' (Nagarasan, 1991)

என்னும் நூற்பாவில் வண்ணச் செய்யுள் போட்டியில் தோற்றவரின் காது அறுக்கப்படும். வெண்பாப் போட்டியில் தோற்றால் விருது பறிக்கப்படும். இவ்விரண்டும் அறியாத புலவர்களுக்கு இடையே போட்டி ஏற்பட்டால் அவர்களுக்குத் தெரிந்த செய்யுள் வகையில் போட்டி நடத்தி, அதில் தோற்றவரை வென்றவர் அடித்துத் துன்புறுத்தி மகிழ்வது தகுந்த முறை என்று கூறுவது சரியே என்கிறார் தண்டபாணி சுவாமிகள். மக்கட்கு நன்னெறி புகட்டவேண்டிய புலவர்கள் தம் இலக்கியங்களில் கொலையையும் புலால் சமைப்பதையும் உயர்த்திப்பாடக் கூடாது என்று கூறிய தண்டபாணி சுவாமிகள், அதே புலவர்கள் தோற்றவரை அடித்துக், காதறுத்துத் துன்புறுத்தி மகிழ்ச்சியடையும் அக்காலத்தின் கொடிய வழக்கத்தைச் சரியானது என்றுகூறி வன்முறையை இலக்கணமாக வகுத்துள்ளார். இது சீவகாருண்யத்திற்கு முரண்பட்ட விதியாகும். இவ்விடத்தில் சீவகாருண்யத்தைக் காட்டிலும் பிழையற்ற தமிழ்ப்புலமையே முதன்மையாகக் கருதப்பட்டுள்ளது.

## கல்வியில் சமயச்சார்பு

'தன்னுடைச் சமயத் தலைவனைப் பரவா

நூல்வழிப் புலமை நுவல்கையும் தவறே' (Nagarasan, 1991)

இந்நூற்பாவில், ஒரு புலவன், தான் சார்ந்துள்ள சமயத்தின் தெய்வம் அல்லது தலைவனைப் போற்றாத நூலினைக் கொண்டு மாணவர்க்குப் புலமையைக் கற்பித்தல் தவறானது என்று தண்டபாணி சுவாமிகள் கூறுகிறார். தமிழ் இலக்கியத்துறையில், 18ஆம் நூற்றாண்டு காலத்தில் பிற சமய நூல்களைக் கற்கக்கூடாது என்று சில சைவசமயிகள்; விதித்த கட்டுப்பாடுகள் 19ஆம் நூற்றாண்டு இறுதிவரை சமயப் புலவர்களால் கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளது. 'சுவாமிநாத தேசிகர் 18ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இருந்தவர். சிவஞான சுவாமிகள் அந்த நூற்றாண்டில் வாழ்ந்து 1785ஆம் ஆண்டு காலமானார். இவர்கள் செல்வாக்கடைந்திருந்த கல்வி வளர்ச்சிக்குத் தாயகமாயிருந்த சைவ மடங்களைச் சேர்ந்தவர்கள். இவர்கள் பரப்பிவந்த இந்தக் கருத்து சங்க இலக்கியங்களையும் சமண பௌத்த இலக்கியங்களையும் சைவர்கள் படிக்கக் கூடாதென்னும் கொள்கை - அந்தக் காலத்தில் செல்வாக்கடைந்திருந்தது. இவர்களிடம் கல்வி பயின்ற மாணவர்கள் பலரும் இக்கொள்கையை ஆதரித்துப் பின்பற்றினார்கள். சைவமடங்களும் இவர்கள் கொள்கையை ஆதரித்துச் சங்க நூல்களையும் மணிமேகலை சிலப்பதிகாரம் முதலிய இலக்கிய நூல்களையும் மாணவர்களுக்குப் பாடஞ் சொல்வதை நிறுத்திக் கொண்டன இந்தக் கொள்கை 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையில் நிலைத்திருந்தது (Vengadasamy.Seeni 1962). இவ்வாறு சமயம் சார்ந்த கல்விமுறை வழங்கிவந்த வரலாற்று உண்மையைத்தான் தண்டபாணி சுவாமிகளின் மேற்கண்ட நூற்பா வெளிப்படுத்துகின்றது. அதுவே தண்டபாணி சுவாமிகளின் கருத்தாயினும், அவர் சமயம் சாராமல் புகழ்பெற்ற திருக்குறள் போன்ற சில நூல்களைப் போற்றியுள்ளார். இதனை,

'பொதுநூற் சொல்லையும் போற்றுநர் மொழியையும்

சதுரல வேனச் சாற்றல்ஓர் தவறே' (Nagarasan, 1991)

என்னும் நூற்பாவில், எல்லோராலும் சிறப்புடையதாக ஒருமித்து ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நூல்களின் கருத்துகளையும் அந்நூல்களின் சிறப்பை எடுத்துப் பாராட்டுபவர்களின் கூற்றுகளையும் அறிவற்றவை எனக் கூறுவது பெரும் தவறாகும் என்கிறார். இது பொதுவான நூல்களுக்கு மட்டுமே காட்டப்பட்ட சமரசத் தன்மையாகும். அறுசமயம் தவிர்த்த மாற்றுச்சமய நூல்களுக்கு சமரசம்

காட்டப்படவில்லை. அவை சைவர்களால் புறக்கணிக்கப்பட்டே இருந்தன என்பதையும், ஆசிரியரின் கொள்கையும் அவ்வாறே இருந்தது என்பதையும் அறியமுடிகிறது

## வாக்குப்பலிதம்

மரபியல்பில் தம் புலமைத் திறத்தால் பல்வேறு அதிசயங்களை நிகழ்த்தியவர்களாகக் குறிக்கப்படும் புலவர்களை, புதிதாக வரும் புலவர்கட்கு முன்மாதிரியாகக் கூறியுள்ளார் தண்டபாணி சுவாமிகள்.

'என்பு பெண்ணாகவும், ஈனச் சமணர்

வன்கழு ஏறவும், மறைக்கதவு அடைக்கவும்

காழியூர்ப் புலவன் கழறினன் தமிழே' (Nagarasan, 1991)

திருஞானசம்பந்தர் தம் புலமையால்; மயிலாப்பூரில் பூம்பாவையின் எலும்புகளை மீட்டும் உயிருள்ள பெண்ணாகுமாறும், மதுரையில் எண்ணாயிரம் சமணர்களைக் கழுவேறுமாறும், திருமறைக்காட்டில் ஆலயக்கதவு அடைபடுமாறும் தேவாரம் பாடினார் என்று இந்நூற்பாவில் கூறுகிறார் தண்டபாணி சுவாமிகள். மேலும் ஒருவரது புலமையை அவரது வாக்குப்பலிதத்தை வைத்து மதிப்பிடுகிறார். ஆசிரியரின் இப் போக்கினை அவரது வேறுசில நூற்பாக்களிலும் காணமுடிகிறது.

'கால மழைஎனப் புதுக்கவி கழறலும்

சொற்படி நடக்கக் காண்டலும் பிறவும்

தெய்வத் தன்மைப் புலமை ஆமே' (Nagarasan, 1991)

என்னும் நூற்பாவில், "கார் காலத்தே பெய்யும் பெருமழை போலப் புதிய செய்யுட்களை வரிவடிவத்தின் துணையுமின்றிக் கவனம் செய்து வாயாலேயே பொழிந்து தள்ளும் ஆற்றலும், வாக்குப் பலிதமும், இம்மை மறுமைப் பயன்களை அடைதலும் (தன்னுடைய அறிவினால் மட்டும் அன்றி) இறைவனின் திருவருளாலேயே கைவரப் பெறும். அதனால் இந்நிலை தெய்வத் தன்மைப் புலமை எனப்படும் என்றவாறு" (Nagarasan, 1991).

'நவின்றும் அங்ஙனம் நடக்கக் காணாப்

புலமைத் தன்மையும் பொருவில் மெய்யருள்

ஆம் எனக் கருதும் அஃதும்ஓர் பிழையே' (Nagarasan, 1991)

இந்நூற்பாவில், "ஒரு கவிஞனிடம் வாக்குப்பலிதம் இல்லாவிடினும் அவனிடமுள்ள கல்வி மற்றும் மொழிப்புலமையே இணையற்ற இறையருள் ஆகும்" என எண்ணுதல் தவறாகும் என்கிறார். இவ்வாறு, தங்குதடையற்ற கவியாற்றலையும் கவிதையின் வாக்குப்பலிதத்தையும் தெய்வத்தன்மைப் புலமை என்று தனியாக அடையாளப்படுத்துகிறார் தண்டபாணி சுவாமிகள். இக்கருத்து "வர்க்கமற்ற சமுதாயத்திலும் வர்க்க சமுதாயத்தின் தொடக்கக் கட்டங்களிலும் தீர்க்கதரிசியைப் போலவோ அல்லது புரோகிதனைப் போலவோ எல்லா இடங்களிலும் கவிஞனும் மக்களால் போற்றி வணங்கப்படக்கூடியவனாக இருந்தான். அவனது வாழ்த்துக்களுக்கும் சாபங்களுக்கும் ஒரு தனி ஆற்றல் இருப்பதாகவும் அது ஆவியுலகத்துடன் அவனுக்கிருந்த நெருக்கத்தின் காரணமாகக் கிடைக்கப்பெற்றது என்றும் கருதப்பட்டது. கவிஞன் தனது கவிதையைக் கேட்பதற்குக் குழுமியுள்ளோரிடம் எவ்வித முன் தயாரிப்புமின்றி கவிதையைப் புனைந்துகாட்டுகிறான் கவிதையை உருவாக்கும் சொற்கள் அவனுடையவை அல்ல மாறாக அவன் மூலமாகப் பேசும் ஒரு கடவுளின் அல்லது ஆவியின் சொற்கள்தான் என்று கருதும் வகையில் அவனிடம் உணர்வு பூர்வமான முயற்சி ஏதும் இல்லாமல் வார்த்தைகள் அவனிடமிருந்து வருகின்றன. ஒரே வார்த்தையில் சொல்வதென்றால் அவன் ஆட்கொள்ளப்படுகிறான்" (George Thomson, 1974) என்ற ஜார்ஜ் தாம்ஸனின் கருத்தோடு பொருந்துகிறது. மருத்துவம் வளர்ச்சி அடையாத பழங்காலத்தில் நோய் நீங்கும்படி மந்திரம் கூறுவதே மருத்துவமாகச்

செயல்பட்டது. "பின்னொரு கட்டத்தில், மேலும் அறிவுபூர்வமான மருத்துவ சிகிச்சை முறைகள் வளர்ச்சியடைந்தவுடன், இந்த மந்திரவாதிக் குழுக்கள் தங்களது ஆதிகாலச் செயற்பாடுகளைக் கைவிட்டு, ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் பயணம் செய்யும் நடிகர்கள் குழுக்களாக மாறினர். இவ்வாறுதான் முன்னாள் மந்திரவாதி கவிஞன் - நடிகனாக மாறினான்" (George Thomson 1974) என்று கவிஞனின் தோற்றத்திற்கான காரணத்தை உணர்த்துகிறார் ஜார்ஜ் தாம்ஸன். கவிஞர்களுக்கு வாக்குப்பலிதம் இன்றியமையாதது என்ற கருத்து, ஆதிகாலத்தில் அவர்கள் மந்திரவாதிகளாய் இருந்து கவிஞராகப் பரிணமித்ததன் விளைவு என்று ஜார்ஜ் தாம்ஸனின் கூற்றால் அறியமுடிகிறது. அவ்வாறு பல்வேறு புலவர்கள் தம் புலமையால் செய்து காட்டியவையாக இலக்கியங்களிலும் வாய்மொழியாகவும் கூறப்பட்டுள்ள அதிசயச் செயல்களைப்பற்றி, தான் எடுத்துரைப்பதற்கான காரணத்தையும் தண்டபாணி சுவாமிகள் மரபியல்பின் இறுதி நூற்பாவில் கூறுகிறார்.

'புலமையை இழிவுஎனப் புகல்வார் புந்தி

நாணுறும் பொருட்டும் நண்ணுவார் நெஞ்சம்

களித்துக் காரியம் கைக்கொள முயலும்

பொருட்டும் மரபியல் இவ்வணம் புகன்றுஇனிச்

செயல்வகை இயல்பினைச் செப்புதுந் தெளிந்தே' (Nagarasan, 1991)

என்னும் அந்நூற்பாவில், தமிழ்ப்புலமையானது, நடைமுறை வாழ்விற்குப் பயன்படாத ஒன்று எனக் கூறுவோர் வெட்கமடையவும், அவ்வாறு கூறுவதை ஒழிக்கவேண்டும் என்பதற்காகவும், அப்புலமையை விரும்புவோர் மன ஊக்கங்கொண்டு அத்துறையில் வெற்றி பெறுவதற்காகவும் தமிழ்ப் புலவர்கள் தம் புலமைத் திறத்தால் செய்ததாக நம்பப்படும் செய்தற்கரிய செயல்களைத் தொகுத்துக் கூறியதாக விளக்கமளிக்கிறார் தண்டபாணி சுவாமிகள். இவரது இந்நிலைப்பாடு "தம் சமயத்தின் இறையியல் தத்துவம் என்பது குறித்தப் புரிதலுணர்வு குன்றிய மக்கள்திரளை ஈர்க்கும் வழிமுறையாகவும் தம் சமயத்தில் நிலைத்திருக்கச் செய்யும் கருவியாகவும், புராணக்கதைகளைப் பயன்படுத்திக் கொள்வர்" (Sivasubramanian, 2019) என்னும் கருத்தோடு இணங்குகிறது. இதனால், புராணச்செய்திகளில் இருந்து தண்டபாணி சுவாமிகள் எடுத்துக்காட்டும் புலவர்களின் வாக்குப்பலிதமும் அதிசயச்செயல்களும் அறுசமயம் மற்றும் அது சார்ந்த கவிஞர்க்கும் கவிதைக்கும் சமுகத்தில் இருக்கும் மதிப்பு குறையாமல் தக்கவைத்துக் கொள்வதற்காகக் கூறப்பட்டவை என்பதை அறியமுடிகிறது. அத்தகைய வாக்குப்பலிதம் உடைய புலமையை அடைவதற்குத் தெய்வத்தின் துணை இன்றியமையாதது என்பதை,

'கருதிய தெய்வம் கண்முன் தோன்றிப்

பேசின் அல்லது பெருந்தகைப் புலமை

எய்தாது என்றிடல் இயல்பாம் அன்றே' (Nagarasan, 1991)

என்னும் நூற்பாவில் வலியுறுத்துகிறார் தண்டபாணி சுவாமிகள். தம்மால் தியானிக்கப்படுகின்ற தெய்வத்தின் திருவடிவம் ஊனக்கண் காண எதிரே காட்சியளித்தும், தம் செவி கேட்குமாறு உரையாடியும் ஆட்கொண்டாலன்றி முழுப்புலமை அடைந்ததாகக் கூறமுடியாது எனல் மரபு என்று அவர் கூறுகிறார். அவரைப் பொருத்தவரை புலமை என்பது சமயநெறி நின்று இலக்கியம் படைத்து தெய்வத்தைக் காண உதவும் ஒரு கருவியாகவே உள்ளது.

'கருதிய தெய்வமும் கருமமும் கண்எதிர்

காணார் புலமையைக் கண்டும் கயவர்

அஞ்சத் திகழ்நலத்து அவாவுறல் உயர்வே' (Nagarasan, 1991)

என்னும் நூற்பாவில் பெரும் புலமையுடைய சான்றோர்களே தெய்வத்தைக் காணமுடியாமலும், வாக்குப்பலிதத்தால் அதிசயங்களை நிகழ்த்திக்காட்டமுடியாமலும் இருப்பதைக் கண்டு மனம் தளராமல்

முன்னோர் கூறியுள்ளபடி இவையெல்லாம் நிகழ்த்தக் கூடியவைதான் என்று உறுதியாக நம்பி முயற்சிப்பதே சிறப்பு என்கிறார் தண்டபாணி சுவாமிகள். இதன் வாயிலாக, வாக்குப்பலித்தல், தெய்வம் தோன்றிப் பேசுதல் ஆகியன நிகழக் கூடியவையா? நிகழ்ந்திருக்குமா? என்ற ஆராய்ச்சிகள் இன்றி வெறும் "முன்னோர் வாக்கு" என்ற நம்பிக்கையை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு வலியுறுத்தப்படுகின்றன என்பது தெளிவாகின்றது. இந்நூற்பா, புலமைபெற விழைவோர்க்கு இந்நம்பிக்கை கட்டாயம் என்பதை உணர்த்துகிறது. அவ்வாறு முன்னோர் வாக்கான புராணங்களை நம்பவில்லை என்றால் பாவம் எய்திக் கீழ்மையர் ஆகிக் கெடுவர் என்று சபிக்கிறார் தண்டபாணி சுவாமிகள். "தெய்வம் கண்எதிர் திகழாது என்னும் புன்மைத் தவத்தோர் புராணம் பலவற்று எண்ணில் பலர் கண்டிட்டதாகச் சொல்லல்முற்று இகழ்ந்த தோடம் எய்திக் கீழ்மையர் ஆகிக் கெடுவார் அன்றே" என தண்டபாணி சுவாமிகள் வன்மையாகச் சாபமிட்டுள்ளதைத் தம் உரையில் எடுத்துரைக்கிறார் (Nagarasan, 1991)

## புலமையை அங்கீகரிக்கும் கூறுகள்

19ஆம் நூற்றாண்டில் தமிழ்ப் புலமை என்பது மொழி அறிவு, படைப்பாற்றல் ஆகிய கூறுகளின் அடிப்படையில் மட்டும் மதிப்பிடப்படவில்லை. தெய்வபக்தி, சமயச்சார்பு ஆகிய கூறுகளுக்கும் புலமையை அங்கீகரிப்பதில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. சமயச்சார்பற்ற, தெய்வத் துதியற்ற படைப்புகளை பெரும் புலவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் மறுதளிக்கும் நிலை இருந்துள்ளதை,

'தெய்வத் துதிவழி தேறாப் புலமை

நைவும் சிறுமையும் நாணமும் தருமே' (Nagarasan, 1991)

என்னும் நூற்பாவால் உணரமுடிகிறது. இதில், தெய்வத்தைத் துதிப்பதன் வழியாகத் தேர்ச்சிபெறாத கவிதைபுனையும் ஆற்றலானது, தளர்ச்சியையும் பழியையும் அவமதிப்பையும் தரும் என்று கட்டுப்பாடு விதிக்கிறார் தண்டபாணி சுவாமிகள். அவரது சமயப்பற்றும், தெய்வபக்தியும் இந்நூற்பா வாயிலாகப் புலமைக்கான பண்புகளாகத் திணிக்கப்படுகிறது. இது அனைத்து சமயத் தெய்வங்களுக்கும் பொருந்துமோ எனில், ஆசிரியர் அறுசமயங்களுள் மட்டுமே சமரசப்போக்கு உடையவராக உள்ளார். சமணர்களை "ஈனச் சமணர்" (Nagarasan, 1991) என்றும், பௌத்தர்களை "பேசும்நா இன்றிப் பிணம்போல் இருக்கக் கண்டது அருள் எனக் கழறுதல் முறையே" என்றும் பிற சமயத்தினரை வெறுத்து இகழ்கிறார். எனவே இந்நூற்பா அனைத்து சமயத் தெய்வங்களுக்கும் பொருந்தும்படிக் கூறப்படவில்லை.

அந்நாளில் தெய்வபக்தியும் சமயப்பற்றும் எவ்வாறு புலமையை அங்கீகரிப்பதில் ஆதிக்கம் செலுத்தின என்பதை உணர்த்தும் ஒரு நிகழ்வை, புலமை இலக்கணத்தோடு பொருத்திப் பார்ப்பது நலம்.

'நாடகம் கொச்சகம் ஆதிய தொட்டுப்

பாடல் இனிதுஎனப் பகர்வது முறையே'

(நூற்பா.658அறுவகை இலக்கணம்)

என்னும் நூற்பாவில், தாமாக முயன்று புலமை அடைவதற்கான முதல் படியாக பதம் கீர்த்தனை எனப்படும் நாடகத்தமிழ்ப் பாடல்களை முதலில் இயற்றத் தொடங்கிப் பழகுவது சிறப்பாகும் என்பது மரபு என்று கூறுகிறார் தண்டபாணி சுவாமிகள். இதில் கீர்த்தனை என்பது பெரும்பாலும் உரைநடையாகவும், தளைக்கட்டுப்பாடுகள் ஏதுமின்றி, எழுதுவதற்கு எளிமையாகவும் இருப்பதால், முதலில் இதனை இயற்றிப்பழகுக என்றார். எனினும் இவ்வகைக் கீர்த்தனைகள் இயற்றுவதற்கு மிகுந்த இசையறிவு தேவைப்படும் என்றும், யாப்பு நிலையில் மட்டுமே கீர்த்தனை எளிமையானது என்றும் புலவர் ப.வே.நாகராசனின் உரைவிளக்கத்தின் வாயிலாக அறியமுடிகிறது. இந்நூற்பாவில் புலமை பெறுவதற்கான முயற்சியில் முதற்படியாகக் கூறப்படுவதாலேயே கீர்த்தனை இயற்றத் தேவைப்படும் இசையறிவுக்கு முதன்மையளிக்காமல், யாப்புக்கு மட்டுமே முதன்மை அளிக்கப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. அக்காலப் பெரும்புலவர்கள் கீர்த்தனைப் படைப்புகளை இழிவாகவே கருதினர்.

இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு கீர்த்தனை உலகில் புகழ்பெற்ற கோபாலகிருஷ்ண பாரதியார் என்பவர் இயற்றிய "நந்தனார் சரித்திரக் கீர்த்தனை" என்ற பனுவலாகும். "இக்கீர்த்தனை நூல் அடைந்திருந்த புகழினை உ.வே.சா அவர்கள் கூறியுள்ளார். 'அவர் (கோபாலகிருஷ்ண பாரதியார்) நந்தன் சரித்திரம் செய்துமுடித்த போது அந்தச் சரித்திர அமைப்பும் ஹிந்துஸ்தானி சம்பந்தமான சங்கீதப் பகுதிகள் பல அதில் நன்றாக அமைந்திருந்ததையும் அதில் காணப்படும் பக்திச் சுவையையும் அறிந்து பலரும் பாராட்டுவாராயினர். இசைப் பயிற்சியுள்ள ஏழை ஜனங்கள் அதிலுள்ள கீர்த்தனங்களைப் பாடல் பண்ணிப் பிறரிடம் பாடிக்காட்டி பொருள் வருவாயடைந்து கவலையின்றி வாழ்ந்து வந்தனர்'. அந்த சரித்திரத்தைப் பற்றிய பேச்சு தமிழ்நாடு முற்றும் அக்காலத்தில் பரவி இருந்தது" (Govindarajan.N2016). "இந்தக் கீர்த்தனைக்கு மகாவித்துவானிடம் சிறப்புப் பாயிரம் பெற விரும்பினார் கோபாலகிருஷ்ண பாரதியார். ஆனால் அவரது நூல் பெரியபுராணத்திலுள்ள திருநாளைப்போவார் புராணப்படி அமையாமலும், தமிழ் இலக்கண வழுக்கள் இருந்தது பற்றியும் மகாவித்துவான் சிறப்புப் பாயிரம் தர விரும்பவில்லை. அவரிடம் சிறப்புப் பாயிரம் வாங்க பலமுறை அலைந்தார் கோபாலகிருஷ்ண பாரதியார். தகுதியில்லை என்றாலும் சில வரிகளாவது பாயிரம் எழுதிக் கொடுக்கும் மகாவித்துவான், இவர் கேட்கும் போதெல்லாம் மற்றொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி அனுப்பிக்கொண்டிருந்தார். பாரதியாரோ விடுவதாக இல்லை. ஒருநாள் உணவருந்திவிட்டு மகாவித்துவான் நித்திரையிலிருந்த போது பாரதியார் திண்ணையில் அமர்ந்துகொண்டு தன்னுடைய நந்தனார் சரித்திரக் கீர்த்தனையைப் பாடத் தொடங்கினார். இவர் பாடுவதைக் கேட்டு மகாவித்துவான் விழித்துக்கொண்டார். அப்போது 'கனகசபாபதி தரிசன மொருநாள் கண்டால் கலிதீரும்' என்ற கீர்த்தனத்தை பாரதியார் பாடத்தொடங்கினார். மகாவித்துவான் மனம் கனிந்துவிட்டது. பக்தி மிகுதியால் கண்ணீர் வெளிப்பட்டது. உடனே எழுந்துபோய் ஒரு பாடலை எழுதிக்கொடுத்து இதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும், அவரை அலைக்கழித்ததற்குப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார் மகாவித்துவான்" (Govindarajan, 2016). 'ஊர் ஊராகச் சென்று பாடப்படும் கீர்த்தனையை வழுக்கள் நிறைந்து காணப்படுவதாகவும், செய்யுளில் இயற்றப்பட்ட சைவர்களால் பின்பற்றப்படுவதுமான பெரியபுராணத்தைப் பின்பற்றி அமையவில்லை என்பதற்காகவும் மகாவித்துவான் அதை நிராகரித்திருக்கிறார். மக்கள் இலக்கியம் ஒன்று பெரும்புலவர் ஒருவரின் அங்கிகாரத்துக்காக ஏங்கி நின்றபோது அது தரப்படவில்லை. பின்னால் பக்தியைக் கொண்டுதான் வாங்கமுடிந்ததே ஒழிய அந்த நூலுக்கான தகுதியை நிருபித்து அல்ல' (Govindarajan.N 2016). இவ்வரலாற்று நிகழ்வு, சமயப் பெருநூல்களில் இருந்து மாறுபட்ட கருத்துடைய மக்கள் இலக்கியப் படைப்புகள் எவ்வாறு அங்கீகாரம் இன்றி சைவசமயப் பெரியோர்களாலும் புலவர்களாலும் ஒதுக்கப்பட்டன என்பதையும், பக்தி என்ற ஒற்றைக் கூறுக்காகவே பிழைகளும் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்பதையும் ஒருசேர உணர்த்தும் நிகழ்வாக அமைந்துள்ளது.

## தமிழ்ப் புலமைத்துறையில் வர்க்க ஆதிக்கம்

தமிழ்ப் புலமைத்துறையில் சைவ சமயம் எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதை அறியும் அதே நேரத்தில், அச் சைவ சமயத்தில் குறிப்பிட்ட நிலவுடைமை வர்க்கமான வேளாளர்களே ஆதிக்கம் செலுத்தினர் என்பதையும் அறியமுடிகிறது. சமயம் பரப்புவதிலும் பாண்டித்தியம் அடைவதிலும் இவ்வகுப்பினரே முதன்மை வகித்தனர். 'சைவசபைகளும் சைவசித்தாந்த சங்கங்களும் கழகங்களும் சைவப்பிரகாச சபைகளும் தோன்றிச் செயல்பட்டன. இவற்றின் புரவலர்களும், இவற்றில் சொற்பொழிவாற்றியவர்களும் வேளாளர்களாகவே இருந்தனர்'. 'தமிழ்க் கல்வி, இலக்கியம், என்று எடுத்துக்கொண்டால் சம்பந்தர், சுந்தரர், சில ஆழ்வார்கள் ஆகியோரைத் தவிர பெரும்பாலான புலவர்களும், பக்தர்களும் பார்ப்பனரல்லாதாராக, குறிப்பாக வேளாளராக இருந்துள்ளதைக் காணலாம். ஒட்டக்கூத்தனின் பரம்பரையினர் என்று செங்குந்த முதலியார்களும், கம்பனின் பரம்பரை என்று வேறு சில வேளாளர்களும் உரிமை கொண்டாடி வந்துள்ளனர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் தமிழகத்தில் நிலவிய ஆசிரிய - மாணவப் பரம்பரைகள் பிள்ளை, செட்டி, முதலியார் ஆகிய வேளாளப் பரம்பரைகளே. காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, சோமசுந்தரம் பிள்ளை, முத்துவீர உபாத்தியாயர், கூழைத் தம்பிரான்,

நீர்வேலி சங்கர பண்டிதர் ஆகியோர் பிரபலமான வேளாளப் பண்டித ஆசான்களாவர்' (Raj Gowthaman, 2005). வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளும் நிலவுடைமை வர்க்கமான வேளாளர் சாதியைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தமிழ்ப் புலமைத்துறையில் சைவ சமயத்தின் ஆதிக்கமும் அதன் காரணமாக அச் சமயத்தைத் தாங்கிப்பிடித்த ஒரு நிலவுடைமை வர்க்கத்தினரின் ஆதிக்கமும் பரவலாக நிலவிவந்துள்ளது தெரியவருகிறது

## தமிழ்ப்புலமைத் துறையில் சமயங்களின் விளைவு

தொன்றுதொட்டு வரும் தமிழ்ப்புலமைத்துறை தொடக்ககாலத்தில் அரசர்கள், வள்ளல்கள், செல்வந்தர்கள் ஆகியோரைச் சார்ந்து இயங்கிவந்தபோதும் அனைத்து மக்கட்கும் பொதுவாக இலக்கியங்கள் படைக்கப்பட்டன. சங்க இலக்கியங்களும் பதினெண் கீழ்கணக்கு நூல்களும் அத்தகைய பரந்த பொதுத்தன்மையும் அறவுணர்வும் கொண்டு படைக்கப்பட்டவை ஆகும். பிறகு பக்தி இயக்ககாலத்தில் இந்நிலை முற்றிலும் மாறியதோடு, சமயச்சார்பான இலக்கியங்கள் படைக்கப்பட்டன. பிற்காலத்தில் செல்வச் சீமான்களும், வேந்தர்களும் களிப்புடன் சுவைப்பதற்காகவே இலக்கியங்கள் படைக்கப்படும் சூழல் நிலவியது. அதே காலத்தில் சமயங்களின் தலைமைப் பீடங்களான மடங்கள் தமிழ்ப்புலமையைத் தம் சமயவளர்ச்சிக்காகப் பயன்படுத்தி வந்தன. இந்நிலை தமிழ் இலக்கியத்துறைக்குப் பெரும் தளையாக இருந்தது. வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் அறுசமயங்களை ஏற்கும் இலக்கியங்களையும் சமயச்சார்பற்ற சில இலக்கியங்களையும் மட்டுமே தமிழுக்கு உரியவையாகக் குறிக்கிறார். ஆனால் மாற்றுச் சமயத்தவர்களின் நூல்களை அவர் ஏற்கவில்லை. தனது புலமை இலக்கணம் வாயிலாக அவர் கட்டமைக்க முயன்றவை "புலமை என்பது தெய்வத்தன்மை உடையது, அது அறுசமயங்களின் தெய்வங்களால் கிடைக்கும் அருளினை அடையஉதவும் கருவி, அவ்வருளால் அதிசயங்கள் நிகழ்த்தக்கூடியது" என்பவையாகும். இவையெல்லாம் அறுசமய இலக்கியங்களிலும் செவிவழிக்கதைகளிலும் அறியப்பட்ட செய்திகளே ஆகும். எனவே இவை அறுசமயப் பெருமைக்குப் பயன்படுவதன்றி வேறில்லை. தண்டபாணி சுவாமிகள், புலமை இலக்கணத்தின் பெரும்பகுதி நூற்பாக்களில் அறுசமயம் சார்ந்தே தமிழ்ப்புலமையை மதிப்பிட்டிருப்பது, தமிழ்ப் புலமைத்துறை சமயம் சார்ந்ததாகவே மேலும் தொடர்வதற்கு வழிவகை செய்வதாகும். சுதந்திரமான இலக்கியப் படைப்புகள் உருவாவதை இது தடுக்கக்கூடியதாகும். 'பண்டைத் தமிழர் நாகரீகமும், பண்பாடும் என்னும் திரவிட மொழிநூல் ஞாயிறு பாவாணர் அவர்களின் நூலுக்கு அளித்துள்ள முன்னுரையில் பெருஞ்சித்திரனார் எழுதியுள்ள வரிகளைப் பாருங்கள்:- தமிழனின் வீழ்ச்சிக்கு அரசியல்காரர்களும், குமுகாயச் சீர்திருத்தக்காரர்களும், எத்தனையோ காரணங்களைத் தத்தம் வரலாற்று அறிவிற்கேற்பக் கூறினாலும், உண்மையான காரணங்கள் இரண்டு. ஒன்று தமிழனின் குமுகாயச் சரிவு; இரண்டு தமிழனின் மொழிச் சரிவு. இவ்விரண்டு சரிவுகளும், ஆரியர்கள் என்று இத் தமிழக மண்ணில் காலடி வைத்தனரோ, அன்றே தொடங்கின. இச் சரிவுக்குத் தடுப்புச் சுவர் கட்டக் கடந்த மூவாயிரம் ஆண்டுகளாகவே தமிழன் முயன்றான். ஆனால் ஆரியத்தால் ஏற்பட்ட சரிவை ஆரியத்தைக் கொண்டே சரிசெய்ய முயன்றதால் தோல்வியே கண்டான். இந்த இரண்டு சரிவுகளுக்கும், இந்நாட்டில் உள்ள சமயங்களே மண்வெட்டிகளாகப் பயன்பட்டன' (SubaVeerapandian, 2012). சமயங்களால் இத்தகைய சரிவுநிலையில் இருந்த தமிழ்ச் சமுகத்தை மீட்பதற்கு, தமிழ்மொழியைச் சமயச்சார்பற்றதாகக் கட்டமைக்க வேண்டிய தேவை இருந்தது. அதற்கான பணியில் இருபதாம் நூற்றாண்டில் பெரியார் ஈ.வே. ரா தலைமையிலான திராவிட இயக்கத்தின் பங்கு மிகப்பெரியதாகும். அதன் பயனாக, மக்களைச்சார்ந்த ஒன்றாக, மக்களின் பண்பை மேம்படுத்தி அவர்களது உரிமைகளைக் கேட்கும் ஒன்றாகத் தமிழ்ப் புலமைத்துறை மாறத்தொடங்கியது. துதிப்பாடல்களால் தெய்வங்களையும் சமயங்களையுமே பாடிப்பரப்பிவந்த தமிழ்ப் புலமைத்துறையில், சமயங்களோடும் சனாதன ஆதிக்கத்தோடும் முரண்பட்டுப் போராடும் இலக்கியங்கள் உருவாகத் தொடங்கின. புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" என்னும் நாடகம், புலவர் குழந்தையின் "இராவண காவியம்" என்ற பெருங்காப்பியம் முதலிய இலக்கியப்படைப்புகள் திராவிட இயக்கத்தின் பகுத்தறிவு, தன்மான உணர்ச்சி, சமத்துவம் முதலிய முற்போக்கான கொள்கைகளின் விளைவாகத் தோன்றின. அவை, தமிழ் மீதிருந்த சனாதன, சமயத் தளைகளைக் கட்டுடைத்து தமிழின ஓர்மையை,

இன விடுதலையை முன்வைத்துப் படைக்கப்பட்ட புரட்சி இலக்கியங்களாகும். இவ்வாறு தமிழ்ச்சமுகத்தில் கருத்தியல் புரட்சி ஏற்பட்டது. '19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20-ஆம் நூற்றாண்டிலும் மக்களின் கருத்திலே மாற்றம் ஏற்பட்டதால் புராணங்களை வெறுக்கத் தொடங்கினர்' (Meenatchi Sundaram,1982). ஆரிய ஆதிக்க எதிர்ப்பு இலக்கியங்கள் தோன்றியதாலும், அறிவியல் வளர்ச்சியாலும், தமிழ் புலமைத்துறையில் 19ஆம் நூற்றாண்டு இறுதி வரை நிலவிவந்த சமயங்களின் ஆதிக்கம் குறைந்தது. சமயம் சார்ந்த படைப்புகளும் தமிழிலக்கியப் பரப்பில் செல்வாக்கை இழந்தன.

## முடிவுரை

சங்க இலக்கிய காலத்திற்குப் பிறகு தமிழ்மொழியின் புலமைத்துறை பல்வேறு சமயநிறுவனங்களின் தாக்கத்திற்கு உட்பட்டே வந்துள்ளது. வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகளின் புலமை இலக்கணம் அதற்கான சான்றாக உள்ளது. தமிழை, அறுசமயம் சார்ந்த மொழியாக இந்நூலில் கட்டமைக்க முயன்றுள்ளார் தண்டபாணிசுவாமிகள். இது தமிழ்மொழியையும், தமிழ்ச் சமுகத்தையும் மதம் என்னும் குறுகிய எல்லைக்குள் அடைக்கக்கூடியதாகும். அறிவியல் வளர்ச்சியாலும், திராவிட இயக்க இலக்கியங்களின் தாக்கத்தாலும் அது நிகழாமற்போனது. தமிழால் சமயங்கள் அடைந்த பயன், சமயங்களால் தமிழ் அடைந்த பயன், எளிய மக்களின் மொழிக்கும் புலமைக்கும் இடையே காணப்படும் இடைவெளி, முரண்பாடு ஆகியவற்றை ஆராய்ந்து அறிவதன் வாயிலாக, அக்காலச் சமூகநிலையை அறியமுடியும். அவ்வாறு அறிவதன்மூலம் சமயவேறுபாடு, வர்க்க வேறுபாடு, சாதி வேறுபாடு, சமூக தனிமனிதச் சிக்கல்கள் ஆகியவற்றோடு போராடும் எளிய மக்களுக்கான ஊடகமாகத் தமிழ்ப் புலமைத்துறையை வளர்த்தெடுக்க வேண்டும்.

## References


George Thomson, (1974), Translation: Rajadurai S.V., Manitha Saram, New Century Book House publication, Chennai, India.

Govindarajan, N., (2016), Athikaramum Tamizh Pulamaiyum, Cre-A: publication, Chennai, India

Lakshmanan, K., (1960) Indian Philosophy, 8thedition, Palaniyappa Brothers publication, Chennai, India.

MeenatchiSundaram, The.Po., (1982), Samaya Tamil, Kaavya publication, Chennai, India.

Nagarasan, Pa.Ve., (1991) Aruvagai ilakkanam, 1st edition, Tamil University publication, Thanjavur, India.

Nakkeerar, (2016) Thirumurugatruppadai Uraivalam, 1stedition, Saratha Pathippagam publication, Chennai, India.

Raj Gowthaman, (2005), Thalithiya Vimarsana Katturaikal, Kalachuvadu Pathippagam, Nagercoil, India.

Sivasubramanian, A., (2019), Vaimozhi Kathaigal, New Century Book House publication, Chennai, India.

SubaVeerapandian (2012), Dravidathal Ezhundhom, Vanavil Puthakalayam, Chennai, India.

Vengadasamy, Seeni., (1962), Mayilai Seeni., Vengada16, Ilangani Pathippagam publication, Chennai, India.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License